மின்னஞ்சல் மூலமாக

ஆதிதிராவிடர் நல ஆணையரகம்

| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| திரு.ச.முனியநாதன்,இ.ஆ.ப.,<br>ஆணையர்,<br>ஆதிதிராவிடர் நல ஆணையரகம்,<br>சென்னை–5. | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,<br>அரியலூர், சென்னை, கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், திருநெல்வேலி, திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், தூத்துக்குடி, வேலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்கள். |

ந.க. எண்.ர1/ 7291 /2020 நாள்.08.01.2021

அய்யா / அம்மையீர்,

பொருள் ஆசிரியர் பணியமைப்பு – கல்வி – பள்ளிகள் – மாவட்டங்களில் காலியாக உள்ள ஆரம்பப்பள்ளி தலைமையாசிரியர்கள் பணியிடத்திற்கு பதவி உயர்வு மூலம் நிரப்பிட கலந்தாய்வு – 12.01.2021. அன்று நடைபெற உள்ளமை – தொடர்பாக.

பார்வை:

1. அரியலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் ந.க.1529/ 2020/ ம2. நாள்.10.07.2020, 15.07.2020, 21.07.2020 மற்றும் 28.09.2020.

2. சென்னை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.ய1 / 2188 / 2020. நாள். 20.08.2020 மற்றும் 28.07.2020.

3. கடலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண்.டபிள்யு9/ 26386 / 2019. நாள். 15.10.2020.

4. தருமபுரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க. 762/ 2018/ கொ2. நாள்.09.10.2020.

5. கிருஷ்ணகிரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண். எல்2 / 156 05/ 2020. நாள்.30.06.2020 மற்றும் 14.10.2020.

6. நாகப்பட்டினம் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண். 1685 /2020 / கே2. நாள். 07.2020, 22.09.2020 மற்றும் 19.10.2020.

7. நாமக்கல் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண். டி2 / 18552 / 2020. நாள். 23.07. 2020 மற்றும் 13.10.2020.

8. நீலகிரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண்.கேச் 3 /8769 / 2010. நாள். 21.07.2020 மற்றும் 20.10.2020.

9. பெரம்பலூர்மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் ந.க.எண். ஐ2 /14449 /2017. நாள்.30.07.2020.

10. புதுக்கோட்டை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண். க்யூ5 / 10061 /2020. நாள். 14.10.2020.

11. சிவகங்கை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண். W2/ 11539 / 2019. 31.07.2020 நாள்.13.10.2020

12. தஞ்சாவூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண். ஜே2 / 14449 / 2020. நாள். 25.08.2020 மற்றும் 14.10.2020.

13. திருநெல்வேலி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் ந.க.எண்.ஏ3 / 11917 / 2020. நாள். 31.07.2020, 11.11.2020 மற்றும் 14.12.2020.

14. திருவள்ளூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண். 11621 /2020 / ஜே5. நாள். 13.10.2020

15. திருவண்ணாமலை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண். கே2 / 9468 / 2020. நாள். 05.04.2020 மற்றும் 06.07.2020.

16. திருவாரூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.5484/ 2020/ கே4.. நாள்.27.07.2020 மற்றும் 5.10.2020.

17 தூத்துக்குடி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண். ஆ1 / 8537 / 2019. நாள். 22.07.2020 மற்றும் 03.09.2020.

18. வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண். கே3 /3924 /2020.நாள். 09.10.2020.

19. விருதுநகர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண். டி2 /304 /2020. நாள்.20.07.2020.

---

2020 – 2021 ம் கல்வியாண்டில் மாவட்டங்களில் இயங்கி வரும் ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளிகளில் காலியாக உள்ள தலைமை ஆசிரியர் பணியிடங்களை 01.03.2020 அன்றைய நிலையிலான இறுதிதோர்தோர் பட்டியலின்படி தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வு வழங்கிட தகுதிவாய்ந்த இடைநிலை ஆசிரியர் / காப்பாளர்களை கீழ்க்கண்ட விவரப்படி நேரில் அழைத்துவர மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| இடம். | எம்.சி.இராஜா கல்லூரி மாணவர் விடுதி, சைதாப்பேட்டை, சென்னை. | | | |
| நாள். | 12.01.2021 | | | |
| நேரம். | முற்பகல் – 10.00மணி | | பிற்பகல். – 2.00மணி | |
| | 1 | அரியலூர் | 14 | திருவள்ளூர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2 | சென்னை | 15 | திருவண்ணாமலை |
| | 3 | கடலூர் | 16 | திருவாரூர் |
| | 4 | தருமபுரி | 17 | தூத்துக்குடி |
| | 5 | கிருஷ்ணகிரி | 18 | வேலூர் |
| | 6 | நாகப்பட்டினம் | 19 | விருதுநகர் |
| | 7 | நாமக்கல் | | |
| | 8 | நீலகிரி | | |
| | 9 | பெரம்பலூர் | | |
| | 10 | புதுக்கோட்டை | | |
| | 11 | சிவகங்கை | | |
| | 12 | தஞ்சாவூர் | | |
| | 13 | திருநெல்வேலி | | |

பதவி உயர்வுக்கு தகுதிவாய்ந்த நபர்கள் தேர்வு செய்யப்பட்டு அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பணியிடங்களை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலம் கலந்தாய்வு நாளன்று பதவி உயர்வு வழங்கிட சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களையும், கண்காணிப்பாளர்களையும் சம்பந்தப்பட்ட கோப்புகள் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் முத்திரையுடன் **(Seal)** நேரில் ஆஜராக அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் பதவி உயர்வு பெறவுள்ள தகுதிவாய்ந்த இடைநிலை ஆசிரியர் / காப்பாளர்களில் நாளது தேதியில் பதவிஉயர்வு துறப்பு எதுவும் செய்யவுள்ளனரா என்பதை அறிந்தும் அவ்வாறு இருப்பின் அடுத்த நிலையிலுள்ள தகுதிவாய்த இடைநிலை ஆசிரியர் / காப்பாளரை உடன் அழைத்து வரவும், பதவி உயர்வு பெறும் விடுதி காப்பாளருக்கு பதிலாக சம்பந்தப்பட்ட விடுதிகளுக்கு பொறுப்பு காப்பாளர் நியமித்திட அருகில் உள்ள விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்கள் புகார் மற்றும் குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லாத விடுதி கூடுதல் பொறுப்பு வகிக்காத காப்பாளர் விபரங்களுடன் கலந்தாய்வு நாளான்று சமர்ப்பிக்கும்படி தெரிவிக்கப்படுகிறது.

தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வு வழங்கிட தகுதிவாய்ந்த இடைநிலை ஆசிரியர் / காப்பாளர்களை கலந்தாய்வு நடைபெறும் இடத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதற்கான பயணப்படிகள் ஏதும் வழங்கப்படமாட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/– ச.முனியநாதன்,
ஆதிதிராவிடர் நல ஆணையர்.

ஆதிதிராவிடர் நல ஆணையருக்காக.

**மின்னஞ்சல்**

ந.க.எண்:ர1/7291 /2020 — ஆதிதிராவிடர் நல ஆணையரகம்
நாள். 09. 01.2021 — சென்னை–5

குறிப்பு

**பொருள்:** ஆசிரியர் பணியமைப்பு –கல்வி– ஆரம்பப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் காலிப்பணியிடங்களை நிரப்பிடும் பொருட்டு இடைநிலை ஆசிரியர்கள்/ காப்பாளர்கள் – ஆரப்பப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வு கலந்தாய்வு – M.C ராஜா மாணவர் விடுதியில் நடைபெறுவதால் கலந்தாய்வு நாளன்று கொரோனா தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வது – தொடர்பாக.

**பார்வை :** இவ்வலுவலக கடித ந.க.எண். ர1/7291/2020, நாள். 08.01.2021

--------xxxxx--------

பார்வையில் காணும் கடிதத்தின்படி தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வு வழங்கிட தகுதிவாய்ந்த இடைநிலை ஆசிரியர்கள்/ காப்பாளர்களை 12.01.2021 அன்று சைதாப்பேட்டை நந்தனம் M.C ராஜா மாணவர் விடுதிக்கு அழைத்துவர சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கலந்தாய்வுக்கு கலந்துக்கொள்ள வரும் ஆசிரியர்கள் கட்டாயமாக முகக்கவசம் , அடையாள அட்டை அணிந்து வரவேண்டும். கலந்தாய்வுக்கு அழைக்கப்படும் நபர் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்படுவர் மற்ற யாருக்கும் கலந்தாய்வுக்கு செல்ல அனுமதியளிக்கப்படாது. மேலும், சமூக இடைவெளியை பின்பற்றியே இருக்கையில் அமரவேண்டும், காய்ச்சல் மற்றும் உடல்நலக்குறைவு உள்ள நபர்கள் தனியறையில் மட்டுமே இருக்கவேண்டும் என்ற விவரத்தினையும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு தெரிவித்திட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

9/1/2021

ஆதிதிராவிடர் நல ஆணையருக்காக.

பெறுநர்

9.01.2021.

சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்கள்.